# ★ இயக்கச்சி - வளலாய் பகுதி மோதல்களில்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 27 இதழ் 151
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11 – 07 – 1992


## 27 படையினர் பலி

[யாழ்ப்பாணம்]
இயக்கச்சிப் பகுதியிலும், வளலாய்ப் பகுதியிலும் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படையினர்மீது மேற்கொண்ட

[4ம் பக்கம் பார்க்க]

## இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் தாக்கப்பட்டனர்

(லண்டன்)
திருமலையில் ஸ்ரீ லங்காப் படையினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலானது படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம்

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழர் நகைகள் படையினரால் சூறை!

[மட்டுநகர்]
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காயாங்கேணி

[4ம் பக்கம் பார்க்க]

# திருமலையில் புலிகள் தாக்குதல்

# 18 இராணுவம் உயிரிழப்பு

(திருமலை)
**திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் என்ற இடத்தில் நேற்று ரோந்து சென்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் பதினெட்டு இராணுவத்தினர் அந்த இடத்தில் கொல்லப்பட்டதுடன் பெருமளவு நவீனரக ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.**

கந்தளாய் றேடியோ சிலோன் இராணுவ முகாமிலிருந்து வாழைமடு முகாமுக்கு நேற்றுக் காலை 7 மணியளவில் இராணுவத்தினர் ரோந்து சென்றபோது கந்தளாய் றேடியோ சிலோன் முகாமிலிருந்து 200 யார் தூரத்தில் இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்து அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் 18 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் படுகாயங்களுடன் முகாமிற்குள் ஓடிவிட்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## மேஜர் கிண்ணி வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
இயக்கச்சிப்பகுதியில் நேற்று இராணுவத்துடன் நடைபெற்ற தீரமிகு மோதலில் விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படை தளபதியானமேஜர்அசோகன் கிண்ணி (கந்தசாமி துரை ரவீந்திரன்- வேம்படி, வல்வெட்டித்துறை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவரின் புகழுடல் இன்று வலிகாமம் பகுதியிலுள்ள வட்

(4ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(திருமலை)
திருமலை மாவட்டம் கந்தளாய் பகுதியில் நேற்று இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் புலிகள் கைப்பற்றிய நவீன ரக ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ கே இலகு இயந்திரத் துப்பாக்கிகள்-2, அதற்குரிய றம் ரவைக்கூடுகள்-10, அதற்குரிய லிங்குகள்-941, ரி-56 துப்பாக்கிகள்-16, அதற்குரிய

[4-ம் பக்கம் பார்க்க]

## தம்புல்லயில் அரசுக்கு எதிராக சத்தியாக்கிரக போராட்டம்

(கொழும்பு)
தம்புல்ல பகுதியில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவிக்கும் உல்லாசப் பிரயாண ஹோட்டல் திட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்படவிருக்கிறது

பௌத்த, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்கள நாளை ஞாயிற்றுக்கிழமை இந்த சத்தியாக்கிரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலாபத்தில் மேற்கொள்ளப்படவிருந்த அரசின் மற்றுமொரு உல்லாசப்பிரயாண ஹோட்டல் திட்டத்தை எதிர்த்து கிறிஸ்தவ, பௌத்த மதத்தவர்கள் ஏற்கனவே அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது

அமெரிக்காவின் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா சிலாபம் பகு

[4-ம் பக்கம் பார்க்க]

## ஆரம்ப ஆசிரியர் பரீட்சைக்கு தோற்றமுடியாது தவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தற்பொழுது தங்கியிருக்கும் வெளிமாவட்டப் பரீட்சார்த்திகள் ஆரம்ப பயிலுநர் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலையிலுள்ளதாக தெரியவருகிறது.

இவர்கள் சொந்த மாவட்டங்களுக்கு உடனடியாகச் செல்லமுடியாது இருப்பதாலும், பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அந்தந்த

'4 பக்கம் பார்க்க)

## நவம்பர் 6-ல் பட்ஜெட்

கொழும்பு
அடுத்தாண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜயதுங்க எதிர்வரும் நவம்பர் மாதம் 6ந் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகத அறிவிக்கப்பட்டது. (மா]

## ஆயிரக்கணக்கான படையினர் தாக்குதல்

(கொழும்பு]
வடபகுதியில் தற்போது நடைபெற்றுவரும் படை நடவடிக்கைகளில் பல்லாயிரக் கணக்கான படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

அரசு ஆனையிறவுப் போரின் பின் தனது முழுப்பலத்தையும் இப்போரில் பிரயோகித்து வருவதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

போர்முனை செய்திகள் குறித்து இராணுவம் வெளியிடும் தகவல்கள் பெருமளவில் மிகைப்படுத்தப்பட்டதாயிருப்பதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

## வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)
வளலாய், இடைக்காடு பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடைபெற்ற மோதலின்போது இரு வீரவேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் செங்கதிர் (சவேரியான் சின்னத்தம்பி, மணற்காடு) லெப் சுடரொளி (குழந்தைவடிவேல் ரமேஸ்,

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையை செப்டம்பர் 30க்குள் முடிக்கும் பணிப்புரை வழங்கப்படவில்லை

[கொழும்பு]
இராணுவ நடவடிக்கையை செப்டெம்பர் 30 க்குள் முடிக்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டதாக வெளிவந்த செய்தியை அரசு மறுத்துள்ளது.

வடக்கு-கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கையை செப்டெம்பர் மாதம் 30ந் திகதிக்குள் முடித்துக்கொள்ளுமாறு அரசாங்கம் பாதுகாப்பு பிரிவினருக்கு எவ்வித பணிப்புரையும் விடுக்கவில்லை என்று முப்படை தலைமையக பேச்சாளரான கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்தார். [மா]

## ஆயுதம் வழங்கும் நடைமுறைகள் மீளாய்வு

(கொழும்பு)
ஊர்காவற்படையினர் மற்றும் பரா இராணுவப்படை போன்ற அமைப்புகளுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்குவதற்கென தற்போதுள்ள நடைமுறைகள்பற்றிமீளாய்வு செய்ய நீதியரசர் டி ஜி. ஜயலத் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (மா]

## இந்திய அரசு மீது மன்னிப்புசபை கண்டனம்

லண்டன்)
இந்தியாவில் அரசியல் பிரச்னை காரணமாக கைது செய்யப்படுவர்களும்கிரிமினல் குற்றவாளிகள் என சந்தேகிககப்படுகிறவர்களும் அரசினால்துன்புறுத்துதலுக்காளாகி தொடர்ந்து கொடூரமான முறையில் நடத்தப்படுகிறார்கள் என்றும் சிலவேளைகளில் அவர்கள் இறந்துபோகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மன்னிப்புச்சபை இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடூரமான குற்றங்களில் ஈடுபடும் இந்திய பாதுகாப்பு படையினருக்கு சட்டரீதியாகவும், அரசு சார்பற்ற முறையிலும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ரி)

# வரி விளம்பரம்

## சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

## தவறிவிட்டது

மாசிலாமணி ஜெகநாதன் ஆகிய எனது அடையாள அட்டை (இல. 683020222V) தவறிவிட்டது. தயவுசெய்து இதைக்கண்டெடுத்தவர்கள் மா. ஜெகநாதன் அராலி தெற்கு, வட்டுக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி-6517)

மா. முத்தையா, மு. நாகம்மா மு. பரமேஸ்வரன் என்பவர்களுடைய உணவு முத்திரைகளும், உப உணவு அட்டையும், குடும்ப அட்டையும் சிவன் கோவில் வடக்கு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா. முத்தையா, இல. 125/66 கண்ணாபுரம் யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (சி-6518)

## புலமைப் பரிசில் பரீட்சை

(ஆண்டு 5)

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப்பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 12-07-92 ஞாயிறு மு. ப. 8-00, மு.ப. 11-00 மணிக்கு நடைபெறும். பதிவு செய்யவும் புலமைப்பரிசில் Paper Class சனி, ஞாயிறு பி. ப. 4-00-6-00 நடைபெறும். திறமையான மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219, நாவலர், வீதி, யாழ்ப்பாணம். (சி-6519)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ் பிராந்திய சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் சமாசத்தலைவர் திரு. ச. முருகனேசன் தலைமையில் நடை பெற்றது. [154]

## இராசி பலன்

11-07-1992
சனிக்கிழமை
(தமிழுக்கு ஆனி 27)

துலாதசிமு இ 9-50 வரை அனுஷம் பி ப 4-19 வரை இராகுகாலம் காலை 8-59 முதல் 10-29 வரை சுபநேரம் பகல் 2-59 முதல் 4-29 வரை சித்தயோகம்.

மேடம்; தாமத வெற்றி, மனப்புலம்பல், துணிவின்மை

இடபம்; திடீர் பயணம், பொருள்சேர்க்கை, காரிய சித்தி

மிதுனம், உயர்வான நோக்கம், பெரிய மனிதர் சந்திப்பு பணவரவு.

கடகம்: காரியபகை, வயிற்றுநோய், அலைச்சல்.

சிங்கம்: திடீர் குழப்பம், மனக்கஷ்டம், பணவிரயம்.

கன்னி: குழந்தைகள் மகிழ்ச்சி, எதிர்பாராத நன்மை, குடும்பசுகம்.

தூலாம்: கருத்து வேறுபாடு, காரணமற்ற கவலை, அகால போஜனம்.

விருச்சிகம்: பலருடைய ஆதரவு, விபத்தில் தப்புதல், புதிய முயற்சி.

தனுசு: முன்கோபம், பெண் பகை, பக்திபெருகுதல்:

மகரம்: கடுமையான முயற்சி! புதிய முதலீடு, தான தர்மம்.

கும்பம்: காரியபலிதம், சுபவிரைய செலவுகள், பொதுப்பணி,

மீனம்: ஏமாற்றம், குடும்ப வேற்றுமை. எதிர்ப்புக்கள்.

ஜோஸ்யர்

# விளையாட்டு அபிவிருத்திக்கு 55,000 ரூபா ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரப் பகுதியில் விளையாட்டு அபிவிருத்திக்கென 55,000 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும், விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்கவும் இந்த நிதி பயனபடுத்தப் படும்.

விளையாட்டுக் கழகங்களும் சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் விளையாட்டுக் கழகங்களும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் திரு டானியல் அன்ரனி தெரிவித்துள்ளார். (154)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியின் வெள்ளிவிழா இன்று தொடக்கம் நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது. சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள மேற்படிசமித்தி மண்டபத்தில் நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கிறது. [மா]

# 31-ம் நாள் ஞாபக அஞ்சலி

31st DAY REMEMBRANCE



## திருமதி கத்தறீனம்மா கிறிஸ்தோப்பர்

Mrs. KATHAREENAMMAH CHRISTOPHER

மலர்வு: 23-03-1916 மறைவு. 10-06-1992

அன்புள்ள ஆண்டவரே? அகிலத்தை ஆள்பவரே!
இறப்பையும் பிறப்பையும் நமக்கு அளித்தவரே!
உயிர்ப்பும் நீரே உத்தானமும் நீரே!
உம்மை நம்புபவர் இறப்பினும் வாழ்வாரே!
உமக்காகவே பிறந்து உமக்காகவே வாழ்ந்து
உமக்காகவே மரித்த கத்தறீனம்மாவின்
ஆன்மாவிற்கு
உன்னதமம் நித்தியமுமான வாழ்வை அளிக்கும்படி
இறைவனே! உம்மை இறைஞ்சுகின்றோம்.

என் அம்மா கேளம்மா
ஏன் அம்மா இப்படி
அம்மா வெகுதூரம் சென்றதம்மா?
அம்மா என்று உனைத்தான் அழைத்தோம்
அம்மா என்று இனி யாரை அழைப்போம்?
அம்மா எம் அருட்பெருஞ் சோதியே!
அம்மா எம்மைவிட்டு அணைந்தனையோ?
அம்மா எம் இல்லச் சுடரொளியே
அம்மா எம்மில்லம் இருள் சூழ்ந்ததம்மா
அம்மா எந்நேரமும் சிரித்துச்சிரித்துக் கதைப்பாய்
அம்மா இனி உன்சிரிப்பைக் காண்பதெப்போ?
அம்மா இனி உன் கதையைக் கேட்பதெப்போ?
அம்மா உன் வரவை எதர்பார்த்தோமம்மா?
அம்மா இனி யார் வரவை எதிர்பார்ப்போமம்மா;
அம்மா ''தம்பி'' ''மகளே'' என்றழைத்தால்
அம்மா எம் உள்ளம் பூரிப்படையுமம்மா
அம்மா இனித்தித்திக்கும் தேன்குரலைக்
கேட்பதெப்போ

அம்மா உன் மகள் பாவம் தனித்தவள் என்பாய்
அம்மா எமை இன்று தவிக்கவிட்டு ஏன் சென்றாய்
அம்மா எம் நெஞ்சம் பதறுதம்மா
அம்மா ஏனம்மா மீளாத்துயில் கொண்டாயம்மா?
அம்மா ஐயோ! அம்மா தாங்கொணு கவலை
சூழ்ந்ததம்மா
அம்மா எல்லோருக்கும் அள்ளி அள்ளிக்
கொடுப்பாயம்மா
அம்மா நாமும் மண்ணை அள்ளி அள்ளிப்
போட்டோமே
அம்மா பாசமும்நேசமும்உம்மிடம்தான் கண்டோம்
அம்மா இன்று எல்லாம் பறிகொடுத்து
தவிக்கின்றோமம்மா
அம்மா உம் நினைவு என்றும் நீங்காது
அம்மா எம் மனம் என்றுமே ஆறாது.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 11-7.1992 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்.**

சென்ற் ஜேம்ஸ் வீதி,
பண்டத்தரிப்பு. [சி-6512]

# 45-ம் நாள் நினைவலைகள்





**செல்வி மறீனு சாந்தினி சவுந்தரராஜ்**
(வல்வெட்டித்துறை)
(வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் பாலர் பாடசாலை ஆசிரியை)
ஜனனம்: 21-11-1963

**செல்வன் சாள்ஸ் றெசான் சவுந்தரராஜ்**
(வல்வெட்டித்துறை)
(யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவன்)
ஜனனம்: 25-05-1969

மரணம்: 28-05-1992

[வல்வை நகர் மீது 28-05-1992 அன்று சிறிலங்கா விமானப்படையின் மூர்க்கத்தனமான குண்டுவீச்சின் போது மரணத்தை தழுவிக்கொண்டார்கள்.]

சகோதரர்களே!

அழகாய் வெண்பறவைகள் வானத்தில் வட்டமிட்டு சிறகசைத்துப் பறக்கையில் திடீரென பூமியில் விழுந்து மோதி சிதறுவதுபோல நிகழ்ந்துபோய்விட்ட உங்கள் முடிவுகளை தெரிந்துகொண்டோம். மரணத்தின் நிழல்கள் உங்களை தொடர்ந்த போது உங்கள் முடிவுகளை நீங்கள் நிச்சயித்துக்கொண்டபோது அந்தக் கணத்தில் எங்களுக்காக, உங்கள் உறவினர்களுக்காக என்ன சொல்வதற்கு உங்கள் உதடுகள் முயன்றன?

எங்களைப் போலவே உங்களுக்கும் உள்ள ஒரு அன்பான அம்மா, அப்பா, அண்ணு, அக்கா, தங்கை, தம்பிகள் இவர்களுக்கெல்லாம் என்ன சேதியை விட்டுச் சென்றீர்கள்?

இன்னமும் எங்கள் தேசத்தில் வீசுகின்ற காற்று, மலர்கின்ற மலர்கள், துளிர்க்கின்ற மரங்கள் வாழ்கின்ற வரையில் உங்கள் புதைகுழிகளில் அவை வீசிக்கொண்டு மலர்ந்துகொண்டு, துளிர்த்துக்கொண்டுதான் இருக்கும்.

சகோதரர்களே!
நீங்கள் உயிருடன் இல்லாவிட்டாலும், நாங்கள் சுவாசிக்கும் காற்றோடு
உங்கள் எண்ணங்கள், அசைவுகள், நினைவுகள் ஒவ்வொன்றும்
என்றும் எங்களோடு.........

எமது கல்லூரி மாணவர்களான 29-05-92ல் மரணித்த சகோதரன் செல்வன் ஜெயச்சந்திரன் (தெல்லிப்பளை), 15-06-92ல் மரணித்த சகோதரி செல்வி கெங்கா துரைராஜா (கோண்டாவில்), 16-06-92ல் மரணித்த விரிவுரையாளர் திரு. சு. சகாதேவன் (தெல்லிப்பளை) ஆகியோரையும் நினைவு கூருவதுடன் அவர்களின் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

92-ம் வருட படவரைஞர் பயிற்சிநெறி மாணவர்கள்.
D/A 1992.

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

செல்வி மறீனு சாந்தினி, செல்வன் சாள்ஸ் றெசான் ஆகிய இருவரினதும் ஆத்மசாந்திக்காக இன்று (11-07-1992) சனிக்கிழமை காலை 7-30 மணியளவில் வல்வெட்டித்துறை புனிதசெபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குகொண்டு இவர்களுக்காக வேண்டிக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்.

தீருவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (சி-6511)

★ தமிழீழ போராட்டம்;

# சிறிய ஆயுதத்துடன் ஆரம்பித்து

# இன்று விமானமே வீழ்த்தப்படுகிறது

## - தேவர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்போராட்டமானது சிறியரக ஆயுதத்துடன் அன்று ஆரம்பமாகி இன்று துப்பாக்கி கொண்டு ஸ்ரீலங்கா விமானப் படையினரின் விமானத்தை சுட்டுவீழ்த்தும் நிலைக்கு மிக உச்சகட்டநிலையடைந்திருக்கிறது.

நல்லூர்கல்வியங்காடு செங்குந்த பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினமிரவு யூலை மாதத்தில மரணித்த மாவீரர்களின் நினைவு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு. தேவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: 76ம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கம் சிறு குழுவாக இயங்கியது- அன்றிலிருந்து மெல்லமெல்ல சிறிதுசிறிதாக வளர்ச்சிடைந்த நிலை உருவாகியது. சிறிதுசிறிதாக இயக்கம் வளர்ந்தபோது 82ம் ஆண்டு செல்லக்கிளி அம்மான் இந்தியாவிலிருந்து இங்கு வந்து போராட்டத்தை முன்னெடுத்துவந்தார் 83ம்ஆண்டு யூலை மாதம் ஆயுதபோராட்ட வரலாற்றில் திருப்புமுனை உருவாகியது.

தமிழீழ விடுதலைப்போராட்டதை ஆரம்ப காலத்தில் நசுக்கவேண்டும் என்ற நோக்கோடுசெயற்பட்ட இன்ஸ்பக்டர் பஸ்தியாம்பிள்ளை இனத்தின் துரோகியாக கருதப்பட்டார். இவரை அழிப்பதற்காக முருங்கன் காட்டுப்பகுதியில் வைத்து செல்லக்கிளி அம்மான் துப்பாக்கியைப் பறித்து ஆயுதப்போராட்டத்தை ஆரம்பகாலத்தில் வளர்த்தார்.

இதுவே இயக்கத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகும்,

ஒவ்வொரு போராளிகளினதும்இழப்புக்கள் ஒவ்வொரு விதமானவை. தாங்கள் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற்காக சயனைட் அருந்தியவர்கள் கடலில் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக பிடிபடாமல் மரணத்தைத் தழுவியவர்கள்இப்படி பலவிதத்தில் வீரச்சாவை எய்தியிருக்கிறார்கள்.

இன்றையபோராட்டங்களில் சில குடும்பங்கள் பங்கேற்றியிருக்கின்றன. போராட்டத்தின் மிகதூரத்தில் பல குடும்பங்கள் நிற்கின்றன. எதிரிக்கு அஞ்சிஎங்குமே ஓடமுடியாது.

தமிழர்கள் இன்று வரையில் சிங்களஅரசுகளால் திட்டமிட் அழிக்கப் பட்டுவருகின்றனர். குடியுரிமைபறிப்பு 58ல் இனக்கலவரம். 74ல் தமிழாராய்ச்சி மாநாட்டுப்படுகொலை. 77, 83ல் இனக்கலவரம் 40 வருடகாலமாக சிங்கள அரசுகள் இதையே செய்துவந்திருக்கின்றன.

58ல் பாணந்துறையில் ஐயரை உயிரோடு எரித்தவர்கள் இன்று தென் தமிழீழத்தில் தமிழர்களை உயிரோடு எரிக்கின்றார்கள்.

போராட்டம் தொடரும். நாங்கள் விட்டுக்கொடுக்கமாட்டோம் கடைசிப் புலிகள் இருக்கும் வரையில் எதனையும் விட்டுக் கொடுக்கத் தயாராகஇல்லை

மக்கள் ஒன்று சேர்ந்து போராட்டத்திற்கு உறுதுணை

[4-ம் பக்கம் பார்க்க]


பணிப்புலம்

அருள்மிகு முத்துமாரி அம்பாள்

ஆலய வழிபடுவோர் சபை

பதிவு இல: (HA/4/J/45)

8வது ஆண்டு பொதுச் சபைக் கூட்ட

அறிவித்தல்

மேற்படி சபையின் 8வது ஆண்டு பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 25-7-1992 சனிக்கிழமை ஆலய முன் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1. இறைவணக்கம்.
2. மௌன அஞ்சலி.
3. 7வது ஆண்டு பொதுச் சபைக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்து அங்கீகாரம்பெறல்.
4. 1991/92ம் ஆண்டு நிதி அறிக்கை சமர்ப்பித்து, விவாதித்து நிறைவேற்றல். அச்சிட்ட அறிக்கை கூட்டத்திற்கு 10 நாட்கள் முன் வெளியிடப்படும்.
5. 1991/92ம் ஆண்டு செயற்பாடு பற்றி தலைவரின் அறிக்கை.
6. 1992/93ம் ஆண்டுக்கான செயற்குழு தேர்தல்: தலைவர். 1 துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் மற்றும் 10 செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்கான அபேட்சக மனுக்கள் 14-7-92 காலை 10 மணியிலிருந்து 20-7-92 மாலை 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அபேட்சக மனுப்படிவங்கள் செயலாளரிடமிருந்து பெற்று. சரியான முறையில் தயாரித்து மனுக்களைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் செயலாளரிடம் கையளிக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம். அவ்விதம் கிடைக்கப்பெற்ற மனுக்களைக் கொண்டே தேர்தல் நடைபெறும.
7. பிரேரணைகள் விவாதித்து நிறைவேற்றல்: செயற்குழுவின் பின்வரும் பிரேரணைகள் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும்:-

(அ) ''எமது கிராம மாணவ மாணவிகளின் உயர் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் வருங் காலத்தில் நடைபெறவுள்ள G. C. E. சாதாரண/உயர்தர தேர்வுகளில் குறிப்பிட்டளவுக்கு மேல் திறமைச் சித்திபெறும் ஒவ்வொரு தரத்திலுமுள்ள முதல் மாணவ/மாணவிக்கு கணிசமான தொகை ஊக்குவிப்புப் பரிசில் வழங்குவதற்கும், அப்பரிசில்களுக்குரிய நிதியை சபை நிதியிலிருந்து வழங்குவதற்கும் இதற்கான ஆலோசனை வழங்க நமது கிராம கல்விமான்கள் கொண்ட உபகுழு ஒன்றைத் தெரிவுசெய்து நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்குழுவிற்கு இப்பொதுச்சபை ஒப்புதல் வழங்குகிறது''

(ஆ) ''காலப் போக்கில், சபையின் நிதிநிலையைப் பொறுத்து, பிரேரணை (அ)வில் குறிப்பிட்டது போன்ற ஒரு ஊக்குவிப்புப் பரிசிலை 5ம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கும் விரிவுபடுத்தக்கூடிய வகையில் செயற்படவும் கல்விமான்கள் உபகுழுவிற்கும், செயற்குழுவிற்கும் இப்பொதுச்சபை ஒப்புதல் வழங்குகிறது''

தனிநபர் பிரேரணைகள் கொண்டுவரவிரும்புவோர் பிரேரணைகளை எழுத்துமூலம் 20-7-92 மாலை 4 மணிக்குமுன் செயலாளரிடம் கையளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

8. புதிய செயற்குழு அறிமுகப்படுத்தல்.
9. நன்றியுரை.
10. இறை வணக்கம்.

அனைத்து உறுப்பினரையும் இக்கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

நன்றி

செயலாளர்,
பணிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வழிபடுவோர் சபை

பணிப்புலம்,
பண்டத்தரிப்பு.
10-7-1992

(சி-6506)


## எழுத்துச் சுதந்திரத்தை யாரிடமும் பறிகொடுக்காத பத்திரிகையாளன்"

செந்தமிழ் அன்னையின் சிறையுடைத்து நாட்டில் நமக்கோர் ஆட்சிகண்டு அரியணையில் அன்னைத் தமிழை அமர்த்தி ஆளவைத்திடாமல் என் பேனு ஓயாது என தன் எழுத்தால மக்களை விடுதலையின்பால் ஈர்த்த இனமான எழுத்தாளர் கோவை மகேசன், மறைந்துவிட்டார்.

சுமார் முப்பதாண்டுகளாக தன் இலட்சியத்தில் வழுவாது நாட்டுப்பற்றுடன்எதுவரினும் அஞ்சேன் என்று தன்பணியை தன் நிறைவு செய்த பெருமை அவருக்குண்டு. இனத்தின் விடுதலைக்காக உழைத்திடவேண்டிய நேரமிது: கண்ணீரும் வியர்வையும் சிந்தி இன்னல பலவற்றை இன்முகத்துடன் ஏற்றபடி விடுதலைப்பாதையில் வீரநடைபோட நம்மை நாமே தயாராகிவிடவேண்டுமென, அந்த இதயம் 'சுதந்திரன் பத்திரிகையில் அரசியல் மடல்களாக வரைந்த காலத்தை நினைத்துப்பார்க்கின்றோம்.

ஒரு பத்திரிகை ஆசிரியனுக்கு சுதந்திரமாக தனது கருத்துக்களை தெரிவிக்கும உரிமை அவசியம் இந்த அடிப்படை உரிமை மறுக்கப்படும்இடத்தில் சுயமரியாதையுள்ள ஒரு எழுத்தாளன் கடமையாற்ற முன்வரமாட்டான்.

''என்னைப் பொறுத்தவரை என்னுடைய இதுவரைகால பத்திரிகைப்பாணியில் எனது எழுத்துச்சுதந்திரத்தை யாரும் பறிக்க முற்பட்டதுமில்லை நான் எனது எழுத்துச் சுதந்திரத்தை யாருடனும் பறி கொடுத்ததுமில்லை; இந்த வகையில் நான் ஒரு அதிஸ்டகரரன்என்பதை பெருமையுடன் ஒப்புக்கொள்கிறேன்'' என சுடர் சஞ்சிகையில் தன் சுயசரிதையில் குறிப்பிடப்பட்டதை எவரும் அறிவர்.

பெரிய படிப்பாளிகள் சிறந்த படைப்பாளியாக இருப்பதில்லை. ஆனால் கோவை மகேசனது பணியோ பலதரப்பட்டது

தமிழர்களின் உரிமைக்குப் பங்கமவரும் ஒவ்வொரு நேரத்திலும் சுகமான சொற்களே சூறுவளியாகிவிடும். அவருடைய பேனவிலிருந்து பிரளயம் பெருக்கெடுக்கும், நெஞ்சினில் கனல் மணக்கும் செஞ்சொல் சரம் எடுக்கும் இவருடைய கருத்துக்களில் வேறுபடுபவர்கள்கூட இவருடைய எழுத்துக்களில் லயப்பட்டதுண்டு.

காலத்தின் யாத்திரையில் காணமல் போய்விட்டான் அந்த பத்திரிகையாளன்

– ஸச்சி


காய்கறி உயர்வால் சுவையான உணவு உண்ணமுடியவில்லை என்ற கவலையா?
கவலையை விடுங்கள் !!

உங்கள் உணவுக்கு சுவையூட்ட அறுசுவையுடன் கூடிய




Mixed Malay Pickle மிக்ஸ்ட்மலே

ஊறுகாயை உங்கள் வியாபாரிகளிடம் இன்றே வாங்கிப் பாவியுங்கள்

450 g போத்தலின் விலை ரூ. 45 மட்டுமே

Taste Line Industries (pvt) Ltd.

No. 14, Seenior Lane, JAFFNA.

(A 2284)



Practice Makes One Perfect

ஆண்டு 5

(புலமைப் பரிசில் 92)

அடுத்த பயிற்சிப் பரீட்சை

12-07-1992

மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1-00 மணிக்கு இந் நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந் நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம். பரீட்சையில் தோற்ற வசதியில்லாதவர்கள் வினத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

- ★ Bond — யாழ்ப்பாணம்
- ★ Express — இருபாலை
- ★ Selin — கோப்பாய்
- ★ Pearl — நீர்வேலி
- ★ Kugan — ஆவரங்கால்
- ★ Satha Pons — வடமராட்சி
- ★ Brilliant — தென்மராட்சி
- ★ Vinyls — சுன்னுகம்
- ★ National — பண்டத்தரிப்பு
- ★ Paarathy — சித்தன்கேணி
- ★ Bitsmans — மானிப்பாய்
- ★ Keen — திருநெல்வேலி
- ★ Osslo — கச்சேரியடி
- ★ Vinayahar — ஆனைகோட்டை
- ★ Lukky — சண்டிலிப்பாய்
- ★ நாவலர் கல்விக் கழகம் — ஆனைப்பந்தி

விபரங்களுக்கு:
Examination Unit

BOND Institutes
யாழ்ப்பாணம்.

(சி-6516)

# வடக்கு-கிழக்கு இணைப்பு: ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பை இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கிறது

ஏழு தமிழ்க் கட்சிகளின் நான்கு அம்சத் திட்டத்தின்படி வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படுவதை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கிறது என்று மேற்படி கட்சியின் செயலர் திரு. வி. பி கணேசன் தெரிவித்துள்ளார். [மா]

## தமிழீழ

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக நின்றால் எதிரியை எல்லையிலே வைத்து துரத்தியடிப்போம்

தமிழீழத்தின் பல பாகங்களில் போராளிகள் நிற்கிறார்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மணலாறு, வவுனியா, முல்லைத்தீவு யாழ்குடா இப்படி பிரதேசங்களில் எதிரியை வரவிடாமல் தடுக்க எங்கள் போராளிகள் முனைப்பாக நிற்கின்றார்கள்.

தமிழ்மக்களே மாவீரர்களின் இலட்சியக்கனவு நிறைவேறவேண்டும். போராட்டத்தில் ஆனையிறவில் - மணலாற்றில் பெரும் எண்ணிக்கையான போராளிகளை இழந்துள்ளோம். போராளிகள் குறைவு. மக்கள் நீங்களும் இணையவேண்டும்.

இளைஞர்களே — யுவதிகளே போர்க்கால சிந்தனையை எண்ணுங்கள் எதிரி தன்முழுப் பலத்தையும பிரயோயோகித்து குடாநாட்டைக் கைப்பற்ற எண்ணுகிறான். எங்கள் போராட்டத்தில் இணைந்து ஆயுதத்தைத் தூக்குங்கள் மண்ணைமீட்போம் மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்றுவோம் என்றார். [56]

## அவசர சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், நல்லூர், யாழ். மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுடனான முக்கியமான கலந்துரையாடலொன்று இன்று சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காகிதச்சாலை ஆகிய இராணுவமுகாம்களிலிருந்து கடந்த 7ம் திகதி வெளியேறிய இராணுவத்தினர் ஆலங்குளம் என்னும் தமிழ் கிராமத்தை சுற்றிவளைத்து இரண்டு பொதுமக்களை சுட்டுக் கொன்றனர்.

இச்சுற்றிவளைப்பில் பெண்களிடமிருந்த நகைகளையும், பெறுமதி வாய்ந்த பொருட்களையும் படையினர் சூறையாடிச் சென்றதுடன் ஆறு தமிழர்களையும் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டுசென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. (வி)

## மேஜர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கோட்டை சண்டிலிப்பாய், மானிப்பாய், யாழ்ப்பாணம், அரியாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளிலும், தென்மராட்சிப் பிரிவில் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளிலும், வடமராட்சிப் பிரிவில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்,

மேற்படி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்ட கலைக்கோன் (அப்புத்துரை பிரபாகரன்-அச்செழு நீர்வேலி), இந்திரன் (மயில்வாகனம் சந்திரன்-அரியாலை) நாவலன் (முனியாண்டி குமார் - கிளிநொச்சி ஆகியோரின் புகழுடல்களும் வலிகாமம் பகுதியில் உள்ள மேற்குறிப்பிட்ட இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று கூறிக்கொள்ளும் பகுதியிலேயே இலகுவாக தாககப்படக்கூடிய நிலையில் உள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

இவ்வாறு பி.பி.ஸி. தனது நேற்றைய கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளது. (க)

## வீரவணக்கம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

2-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)

பலாலிப்பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அருள்நம்பி (மரியதாஸ் ஜோன்சன், கொய்யாத் தோட்டம் - யாழ்ப்பாணம்), கடந்த மாதம் 6 ம் திகதி வலிகாமம் வடக்குப் பகுதியில் நிகழ்ந்த வெடிவிபத்தில் கலையரசன் அல்லது றெபின்சன் (அரிகிரிதாசன்), இதே திகதியில் மட்டக்களப்பு பெண்டுகள்சேனைப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்து நேற்று வீரச்சாவைத் தழுவிய இளங்கோ (செல்லத்தம்பி பாலச்சந்திரன் மன்னம்பிட்டி) ஆகிய வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இயக்கச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடும் தாக்குதலில் 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் 20 படையினர் கொல்லப்பட்டனர்; 35 சிப்பாய்கள் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வளலாய்ப்பகுதியில் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் திடீர் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். சுமார் பத்து நிமிடங்கள் வரை இத்தாககுதல் நீடித்தது. ஆயுதங்களையும் புலிகள் இத்தாக்குதலின்போது கைப்பற்றினர். (150 56)

## திருமலையில்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இத்தாக்குதல் நடைபெற்றபோது இராணுவத்தினருக்கு உதவியாக வாழைமடு மூகாமிலிருந்து வந்த இராணுவ அணியொன்றை விடுதலை புலிகளின் மற்றுமொரு பிரிவு இடைமறித்து தாக்கி முகாமுக்குள் திருப்பி அனுப்பி விட்டனர்.

12 நிமிடங்கள் மட்டும் நடைபெற்ற இந்த மின்னல் வேக அரடித் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எந்த ஒரு உயிர் சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (வி)

## ஆரம்ப

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்திருப்பதாலும், தமக்கு இக்கதி நேர்ந்துள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

## தம்புல்லயில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தியில் மேற்கொள்ளவிருந்த மற்றுமொரு திட்டத்துக்கும் அந்தப் பகுதியைச் சேர்ந்த பலதரப்பட்ட மக்களாலும் அரசுக்கு எதிரான பரவலான ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்ததும் தெரிந்ததே.

நாளை நடைபெறவிருக்கும் சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்துகொள்பவர்கள் தம்புல்லையிலிருந்து பாதயாத்திரை செல்வதற்கும் திட்டமிட்டுள்ளனர்.

## கைப்பற்றப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரவைக்கூடுகள்-57, அதற்குரிய தாங்கிகள்-15, நடுத்தர ரவைகள்-1862, ஜே.ஆர். கைக்குண்டு-2, நிலக்கண்ணி அகற்றி-1, இராணுவத் தொப்பிகள்-13, சப்பாத்துகள்-12 சோடி, பட்டிகள்-8, பைகள்-2, மார்புக்கவசம்-1. (வி)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க. சி. குபேரன்

சிலம்புப்புளியடி, சங்கானை.

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய் குடும்ப விளக்காக ஒளி தந்து இடரகற்றிச் சிரித்து வாழப் பழகி எம்மை அழவைத்து சிலம்பனூர் பாதாரவிந்தங்களை பற்றி நின்ற எம் குல தெய்வமே உம்பாதம் தொழுது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பு, அம்மா, மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
(NKS) குடும்பத்தினர்.

குபேரன் இல்லம்,
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (ஏ-2286)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# மகாபொல கொடுப்பனவு

## 7ம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

**முதலாம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதீக விஞ்ஞானப் பிரிவு<br>விவசாய பீடம் | 13 - 07 - 92<br>16 - 07 - 92<br>20 - 07 - 92 | 9-00 — 12-00 மு. ப.<br>9-00 — 12-00 மு. ப.<br>9-00 — 12-00 மு. ப. |

**இரண்டாம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம்<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதீக விஞ்ஞானப் பிரிவு<br>விவசாய பீடம் | 13 - 07 - 92<br>16 - 07 - 92<br>20 - 07 - 92 | 1-30 — 3-00 பி. ப.<br>1-30 — 3-00 பி. ப.<br>1-30 — 3-00 பி. ப. |

**மூன்றாம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம்<br>கலை ப்பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 15 - 07 - 92<br>17 - 07 - 92<br>21 - 07 - 92 | 9-00 — 12-00 மு. ப.<br>9-00 — 12-00 மு. ப.<br>9-00 — 12-00 மு. ப. |

**நான்காம் வருடம்**

| பிரிவுகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் (4ம், 5ம் வருடங்கள்)<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 15 - 07 - 92<br>17 - 07 - 92<br>21 - 07 - 92 | 1-30 — 3-00 பி. ப.<br>1-30 — 3-00 பி. ப.<br>1-30 — 3-00 பி. ப. |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை;
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

(ஏ-2287) பதிவாளர்



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8